**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. STC. 290/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ஹரிஷ்<br>Probationary Officer<br>Central Bank of India<br>Mayiladuthurai Branch | Prosecution | CW–1. |
| Father Name | முனுசாமி | Court | JM, Court, Sirkali. |
| Village | மயிலாடுதுறை | Taluk | Sirkali. |
| District | மயிலாடுதுறை | Age | 28/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade –III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 05.11.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது. **எதிரி ஆஜரில்லை குவிமுச.317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

என் பெயர் ஹரிஷ்,. நான் Central Bank of India Mayiladuthurai Branch ல் தற்போது துணை மேலாளராக (Probationary Officer) பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எங்கள் கிளை மேலாளருக்கு அனுப்பப்பட்ட சாட்சி சம்மனை தொடர்ந்து நான் அவருடைய அனுமதி பெற்று அவர் சார்பாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க இன்று வந்துள்ளேன். அழைப்பாணையில் கோரப்பட்டு இருந்த சில விபரங்களை நான் எடுத்து வந்துள்ளேன்.

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு எங்கள் கிளை மேலாளர் அதிகாரம் அளித்துள்ளார். அழைப்பாணையில் எங்கள் வங்கி கிளையில் துவக்கப்பட்ட அண்ணா பிரிக்ஸ் சேம்பர் நிறுவனத்தின் கணக்கு எண் 3129134574 என்னும் வங்கி கணக்கு பற்றி விபரங்கள் கோரப்பட்டு இருந்தது. அந்த நிறுவனத்தின் Constitution பற்றியும் அந்த நிறுவன உரிமையாளர்கள் பற்றியும் விபரங்கள் கேட்கப்பட்டு இருந்தது. ஆனால் நாங்கள் மேற்படி வங்கி கணக்கு சம்பந்தமாக நாங்கள் பராமரிக்கும்

தரவுகளை ஆராய்ந்து பார்க்கும்போது அந்த வங்கி கணக்கு 28.06.2011 ந்தேதி அன்று துவங்கப்பட்டது என்பது தெரிய வந்தது. அந்த காலகட்டத்தில் வங்கிகள் கணினிமயமாக்கப்படவில்லை. ஆகவே மேற்படி கணக்கு சம்பந்தப்பட்ட விபரங்கள் எங்கள் வங்கி மென்பொருளில் பதிவாகவில்லை. அதனால் அண்ணா பிரக்ஸ் சேம்பர் நிறுவனத்தின் உரிமையாளர் குறித்த விபரங்களை எங்களால் தேடி எடுக்க முடியவில்லை.

ஆனால் எங்கள் வங்கி மென்பொருளில் அண்ணா பிரிக்ஸ் சேம்பர் நிறுவனத்தின் Specimen Signature Scanning செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டு இருந்தது. மேற்படி வங்கி கணக்கு துவங்கப்பட்ட சமயத்தில் அந்த Specimen Signature பெறப்பட்டுள்ளது. எங்கள் வங்கி மென்பொருளில் இருந்து அந்த Specimen Signature ன் பிரன்ட் அவுட்டை நான் தற்போது எடுத்து வந்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை பார்க்கும் போது அண்ணா பிரிக்ஸ் சேம்பரின் Seal அதில் வைக்கப்பட்டு இருப்பதும் அந்த சீலில் Proprietor என்கிற குறிப்பு உள்ளதையும் காண முடிகிறது. இதிலிருந்து அந்த நிறுவனம் ஒரு Proprietor நிறுவனம் என்பதை அறிந்து கொள்ளலாம். (மேற்படி பிரின்ட் அவுட் Ex.C.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பிரன்ட் அவுட்டிற்கு சாட்சிய சட்டம் பிரிவு 65 B (4) ன் கீழான சான்றிதழில்லை என்னும் காரணத்திற்காக இரு தரப்பிலும் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அண்ணா பிரிக்ஸ் சேம்பர் நிறுவனத்தின் புரோபிரேட்டர் யார் என்பது குறித்து எங்கள் வங்கி தரவுகளில் எதுவும் விபரங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கு துவக்கப்பட்ட காலககட்டத்தில் எங்கள் வங்கி கணினிமயமாக்கப்பட்டு விட்டதா என்றால் இல்லை. அப்படியானால் என் மூலம் குறியீடு செய்யபட்ட ஆவணம் எப்போது மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். கணினி மயம் ஆக்கப்படும் போது அந்த வங்கி கணக்கு குறித்த அனைத்து வி பரங்களையும் கணினி மயம் ஆக்க சாத்தியக்கூறுகள் உ ண்டு என்றால் சரிதான். ஆனால் நாங்கள் Specimen Signature மட்டும் தான் கையொப்பத்திற்காக பதிவேற்றம் செய்வோம். வங்கி

துவக்க படிவத்தை பதிவேற்றம் செய்யும் வழக்கம் கிடையாது.

வங்கி துவக்கப்படிவத்தை பதிவேற்றம் செய்ய தேவையில்லை என்று வங்கி விதி ஏதேனும் இருக்கிறதா என்றால் கிடையாது. கணினி மயம் ஆக்கப்பட்ட காலகட்டத்தில் அந்த மென்பொருளில் வங்கி துவக்கப்படிவத்தை பதிவேற்றம் செய்யும் வசதி இருந்ததா இல்லையா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போது எங்கள் வங்கி மென்பொருளில் துவக்கப்படிவத்தை பதிவேற்றம் செய்யும் வசதி இருக்கிறதா என்றால் இருக்கிறது. Specimen Signature யை பதிவேற்றம் செய்ய வசதி இருக்கும் நிலையில் நிச்சயம் துவக்கப்படிவத்தை பதிவேற்றம் செய்ய வசதி இருந்திருக்கும் என்றாலும் அதனை பதிவு செய்யாதது எங்கள் வங்கியின் சேவை குறைபாட்டையும் அலட்சிய போக்கையும் காண்பிக்கிறது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அண்ணா பிரிக்கஸ் சேம்பர் நிறுவனத்தின் உரிமையாளர் யார் என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணமானது அண்ணா பிரிக்ஸ் சேம்பரின் உரிமையாளர் அதில் கையொப்பம் செய்துள்ள நபர் தான் என்பதை ஊர்ஜிதபடுத்தும் ஆவணம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை மற்றும் Ex.C.1 ஆகிய இரு ஆவணங்களிலும் காணப்படுவது ஒரே முத்திரை மற்றும் கையொப்பம் என்றால் சரிதான். வங்கி சார்பாக வழங்கப்படும் காசோலைகளில் நிறுவன பெயரை அச்சிட்டு கொடுக்கும் வழக்கம் 2011 காலக்கட்டத்தில் இல்லை என்றால் சரிதான்.

தற்போது என்னிடம் காட்டப்படும் வாசாஆ.2 ஆவணமான வங்கி ரிட்டன் மெமோவில் அண்ணா பிரிக்ஸ் சேம்பர் என்று குறிப்பிட்டு தான் காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.C.1ஆவணத்தில் யார் கையொப்பம்செய்துள்ளார்களோ அந்த நபர் தான் அண்ணா பிரிக்ஸ் சேம்பர் நிறுவனத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலையில் காணப்படும்கையொப்பம் அந்த Specimen Signature ன் கையொபத்தோடு ஒத்துப்போகாத பட்சத்தில் Signature Differs

என்றுசொல்லிதான் காசோலை திருப்பபட்டு இருக்கும் என்றால் சரிதான். ஆனால் இந்த வங்கி கணக்கு 2012 லேயே மூடப்பட்டு விட்டது. அதன் பி றகு தான் காசோலை வசூலுக்கு வந்துள்ளது. பொதுவாக ஒரு வங்கி கணக்கு மூடப்படும் போது பயன்படுத்த படாத காசோலைகள் திரும்ப பெற்றுக்கொள்ளப்படும் என்றால் சரிதான். ஆனால் காசோலை வேறு மூன்றாம் நபருக்கு வழக்க பட்டுள்ளதா என்பது குறித்து எங்களுக்கு அப்போது தெரியாது. ஒரு வங்கி கணக்கு மூடப்படும் போது அந்த கணக்கின் உரிமையாளர் நேரில் வந்து கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு மற்றும் வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**